# அலகு – 1

## TT0201 எழுத்து வடிவமும் ஒலிப்பு முறையும்

### இந்த அலகு என்ன சொல்கிறது?

மனிதன் தன்னுடைய உளக் கருத்துக்களைப் பிறர்க்கு உணர்த்தப் பயன்படும் கருவி மொழியாகும். அந்த மொழியானது மக்களின் குரலில் பிறந்து செவிக்கு உணவாகின்ற ஒரு ஒலிநிலை ஆகும். மேலும் மொழி என்பது மக்களையும் சமூகத்தையும் இணைக்கின்ற ஒரு பாலமாகவே செயல்படுகிறது. மொழியானது தன்னை நிலைநிறுத்திக்கொள்வதற்கு அதன் எழுத்து முக்கிய பங்கு வகிக்கிறது. மொழிகளில் தமிழ்மொழியும், அதன் எழுத்தும் காலத்தால் அழியாது நிலைப்பெற்று நிற்பதுடன் தனித்தன்மையையும் பெறுகிறது. அத்தகைய தமிழ்மொழியின் எழுத்துகள் தோற்றம், அவற்றின் வகை, அதன் ஒலிப்பு முறை முதலானவற்றைப் பற்றி இப்பாடம் எடுத்துரைக்கிறது.

### இந்த அலகைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- தமிழ் எழுத்துகளின் தோற்றத்தை அறிந்து கொள்ளலாம்.
- தமிழ் எழுத்துகளின் வகைகளைப் புரிந்து கொள்ளலாம்.
- தமிழ் எழுத்துகளின் ஒலிப்பிறப்பு முறைகளை உணரலாம்.
- மொழிக்கு முதல், இடை, கடை ஆகியவற்றில் வருகின்ற எழுத்துகளைத் தெரிந்து கொள்ளலாம்.
- கிரந்த எழுத்துகளைப் பற்றி அறிந்து கொள்ளலாம்

## பாட அமைப்பு


| | |
|---|---|
| **1.0** | **பாட முன்னுரை** |
| **1.1** | **தமிழ் எழுத்துகளின் தோற்றம்** |
| 1.1.1 | வரிவடிவ வகை |
| **1.2** | **தமிழ் எழுத்துகளின் வகை** |
| 1.2.1 | முதலெழுத்துகள் |
| 1.2.2 | சார்பெழுத்து |
| 1.2.3 | இன எழுத்து |
| 1.2.4 | சுட்டெழுத்து |
| 1.2.5 | வினா எழுத்துகள் |
| 1.2.6 | எழுத்துகளின் பெயர்கள் |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – I** |
| **1.3** | **எழுத்துகளின் பிறப்பும் ஒலிப்பு முறைகளும்** |
| 1.3.1 | ஒலி வடிவ வரிவடிவத் தொடர்பு |
| 1.3.2 | எழுத்தொலிகள் பிறக்கும் முறை |
| 1.3.3 | முதலெழுத்துகள் பிறக்கும் முறை |
| **1.4** | **மொழி முதல், இடை, இறுதி எழுத்துகள்** |
| 1.4.1 | மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் |
| 1.4.2 | மொழிக்கு இடையில் வரும் எழுத்துகள் |
| 1.4.3 | மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் |
| 1.4.4 | மெய்ம்மயக்கம் |
| **1.5** | **கிரந்த எழுத்துகள்** |
| 1.5.1 | இணை எழுத்துகள் |
| **1.6** | **தொகுப்புரை** |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – II** |

## 1.0 பாட முன்னுரை

### பாட முன்னுரை

மக்களின் அன்றாடப் பயன்பாட்டுக் கருவிகளில் மொழியே பெருமளவு பயன்படுகிறது. மக்களின் மனத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையதும் மொழியே ஆகும். பேச்சுமொழியிலும் எழுத்து மொழியிலும் பிறர் கூறும் கருத்தைத் தாம் புரிந்துகொள்ளுதலும், அவ்வாறே பிறர் புரிந்துகொள்ளும்படி தமது கருத்தை எடுத்துரைத்தலும் மொழி வளர்ச்சியின் அடையாளமாகக் கொள்ளலாம்.

மொழி, மக்களுக்கு விழி. விழியில் குறைபாடு இருப்பின், காணும் காட்சியெல்லாம் குறைபாடு உடையதாகவே தெரியும். அவ்வாறே, நாம் பயன்படுத்தும் மொழியிலும் பிழைகள், குறைகள் ஏற்படின், கருத்துப் பரிமாற்றத்தில் சிக்கல் ஏற்படும்; மொழியும் நாளடைவில் மறையும். அவ்வாறு ஆகக்கூடாது என்பதற்காகவே தமிழ் மொழிப்புலவர்கள், மொழியைக் கையாள்வதற்குரிய இலக்கண விதிகளை உருவாக்கினர். அவ்விலக்கண விதிகளைப் பேசும்போதும் எழுதும்போதும் பின்பற்றி வந்துள்ளனர் என்பதை இத்தாளின் வழி அறிய முடிகிறது.

## 1.1 தமிழ் எழுத்துகளின் தோற்றம்

### தமிழ் எழுத்துகளின் தோற்றம்

மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும் பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினான். அதற்காகப் பாறைகளிலும் குகைகளிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.

தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர். அடுத்ததாக ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது. அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் ஓசையைக் குறித்தது. இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர். இன்றுள்ள எழுத்துகள் ஒரு காலத்தில் பொருள்களின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபுகளாகக் கருதப்படுகின்றன.

இன்றைய வரிவடிவ எழுத்திற்கு முற்கால எழுத்துகளே அடிப்படையாகும். இங்ஙனம் அடிப்படையாய் அமைந்த முற்கால எழுத்துகளை ஆராயும்

ஆராய்ச்சியே தொல்லெழுத்தியல் (Palaeography) எனப்படும். எழுத்துகளுக்கு அடிப்படையாக அமைந்தது ஓவியங்களே என்ற அடிப்படையில் எழுத்துகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

- ஓவிய எழுத்து
- கருத்தெழுத்து
- ஒலியெழுத்து

- **ஓவிய எழுத்து**

எழுத்துகளின் தோற்றத்திற்கு முதல் அடிப்படை ஓவியங்களேயாகும். வேட்டையாடித் திரிந்த தொல்பழங்கால மக்கள் தமது கருத்துகளை ஒலியெழுப்பி அவற்றை வெளிப்படுத்த சில கிறுக்கல்களைப் பயன்படுத்தினர். நாளடைவில் ஓவியங்களாக வரைய ஆரம்பித்தனர். அத்தகைய ஓவியங்கள் பிரெஞ்சு, ஸ்பெயின் நாடுகளில் குகைகளில் இன்றும் காணப்படுகின்றன. இவை பல வாக்கியங்களின் தொகுப்பு. அவை சின்னஞ்சிறு ஓவியமாகப் பிரிந்து ஒவ்வொரு ஓவியமும் ஒவ்வொரு சொல்லின் அறிகுறியாக வளர்ச்சியடைந்தன. எழுதத் தெரியாத பழங்காலத்தில் ஒரு கோயிலுக்குப் பல மாடுகள் இனாமாக வழங்கப்பட்டன என்றால், கோயிலார் சுவரில் ஒரு மாட்டின் தலையை ஓவியமாக எழுதி, எத்தனை மாடுகள் வந்தனவோ அத்தனைப் புள்ளிகளைப் பக்கத்தில் இட்டனர். இங்ஙனம் மாட்டின் தலையை எழுதி அது மாடு என்பதன் அறிகுறி என்று கருதப்பட்ட காலமானது, ஒரு சொல்லுக்கு ஒரு ஓவியம் என்று எழுதப்பட்ட காலமாகும். சீனம், ஜப்பானியம் போன்ற மொழிகளில் ஒரு சொல்லுக்கு ஒரு வடிவம் என்ற ஓவிய எழுத்து முறை இன்றும் இருந்து வருகிறது.

- **கருத்தெழுத்து**

ஓவிய எழுத்துகள் நாளடைவில் கருத்தெழுத்தாக வளர்ச்சியுற்றன. சூரியனின் ஓவியத்தை எழுதி இது சூரியன் என்று சொல்லப்பட்டால் அது ஓவிய எழுத்து எனப்படும். அந்தச் சூரியனின் ஓவியம் சூரியனோடு தொடர்புடைய பகற்காலத்தையோ சூரிய வெப்பத்தையோ குறிப்பதாகக் கொள்ளப்பட்டால் அது கருத்தெழுத்து எனப்படும்.

- **ஒலியெழுத்து**

ஒரு சொல்லுக்கு ஓர் அடையாளமாக எழுதிய ஓவியம், நாளடைவில் அச்சொல்லின் முதல் ஒலிக்கு உரிய அடையாளமாக ஏற்பட்டது. இங்ஙனம் ஓர்

ஒலிக்கு ஓர் அடையாளம் என்று ஏற்பட்ட நிலையே ஒலி எழுத்தாகும். அதாவது ஓவிய எழுத்திலிருந்து ஒலி எழுத்துத் தோன்றிய மாற்றம் புரட்சிகரமானதாகும். கிரேக்கமொழியில் காளைமாட்டை ஆல்பா என்பர். எனவே காளைமாட்டின் தலையை எழுதி முதலில் ஆல்பா என்று கூறிவந்தனர். பிறகு அதே ஓவியம் ஆல்பா என்ற சொல்லின் முதல் ஒலியாகிய "அ அல்லது a" என்பதன் அறிகுறியாகக் கொள்ளப்பட்டது.

### 1.1.1 வரிவடிவ வகை

தமிழ் எழுத்துகள் காலந்தோறும் பல மாற்றங்களுக்குட்பட்டுள்ளன. மிக பழங்காலத்திலிருந்து வரிவடிவத்திற்கு வந்தபின் எழுத்துகள் தமிழி அல்லது தமிழ் பிராமி, வட்டெழுத்து மற்றும் இன்றையநிலையில் மேற்கொள்ளப்படும் எழுத்து ஆகிய வரிவடிவ வளர்ச்சிகளைக் கொண்டுள்ளது. இவையன்றி எழுத்துகளுக்குள் அக நிலையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

- **தமிழ் பிராமி**

தமிழ்மொழி மிகத்தொன்மையான மொழி. இம்மொழிக்குரிய எழுத்து வடிவம் எப்பொழுது தோன்றியது என்பது இன்னும் விவாதத்துக்குரியதாகவே இருக்கிறது. தமிழின் ஆதிகால எழுத்து தமிழ் பிராமி எனப்படும். இது தற்போது தமிழி என அழைக்கப்படுகிறது. தமிழ் முதலில் சித்திர எழுத்தாகவும் (சிந்து சமவெளி எழுத்துகள்), பின்னர் கீறல்கள் (ஆங்கிலத்தில் graffiti) என்றும், அதன் பின்னர் தமிழ் பிராமி – தமிழி எழுத்தாகவும் உருப்பெற்றுள்ளது. இவ்வெழுத்துகள் அசோகரது கல்வெட்டுகளில் எழுதப் பயன்படுத்தப்பட்ட பிராமி எழுத்துகளைப் போன்று இருந்தது. ஆனால் தமிழ் மொழியின் ழ, ள, ன, ற போன்ற சிறப்பு எழுத்துகள் சேர்த்துக் கல்வெட்டில் வெட்டப்பட்டுள்ளன. இவ்வெழுத்துகள் தமிழி அல்லது தமிழ் பிராமி என்று வழங்கப்படுகின்றன.

- **வட்டெழுத்து**

வட்டமான கோடுகளைக் கொண்டு இவ்வெழுத்து எழுதப்பட்டதால் இவ்வெழுத்து வட்டெழுத்து என்றும், வட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. வட்டம் என்ற பெயர் குற்றாலத்தில் உள்ள கி.பி. 3 ஆம் நூற்றாண்டு கல்வெட்டில் காணப்படுகிறது. வட்டெழுத்து தமிழ்நாட்டில் சோழநாடு நீங்கலாகவும், கேரளத்திலும் பல நூற்றாண்டுகள் வழக்கத்தில் இருந்திருக்கிறது. சோழர்கள் பாண்டிய நாட்டை தங்கள் ஆட்சிக்குள் கொண்டுவந்த பின் இவ்வெழுத்து முறை அங்கும் செல்வாக்கு இழந்திருக்கலாம். அதன் பின்னர் வட்டெழுத்து, இராஜராஜ

சோழன் காலத்தில் முழுமையடைந்த எழுத்துகளாகப் பரிணாமம் பெற்றது. உலகில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுகளில் தமிழி, தமிழ் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் மட்டுமே 60% ஆகும். தமிழ்க் கல்வெட்டுகள் சீனா, இலங்கை, மலேசியா, தாய்லாந்து, கம்போடியா மற்றும் சுமேரிய பகுதிகளிலும் கிடைத்துள்ளன. இவ்வெழுத்திலான தொன்மையான கல்வெட்டுகள் தமிழகத்தின் தென்மாவட்டங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஆசிரியர்கள், மாணவர்கள், தொல்லியல் ஆர்வலர்களுக்கு நடத்திய சிறப்பு பயிற்சிகள் காரணமாக மிக முக்கியமான வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. சிவகங்கை மாவட்டத்தில் பூலாங்குறிச்சிக் கல்வெட்டு அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. தமிழகத்தின் திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் கிடைத்திடும் நடுகல் கல்வெட்டுகளும் குறிப்பிடத்தக்கவை ஆகும். இப்புதிய கண்டுபிடிப்புகள் தொல்லெழுத்தியலாளர் வட்டெழுத்தின் வளர்ச்சியை முழுமையாக அறிந்திட உதவியாக உள்ளன.

- **தமிழ் எழுத்துகள்**

காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரிவடிவங்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்பொழுதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன. தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களைக் கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும், செப்பேடுகளிலும் காணமுடிகிறது. கல்வெட்டுகள் கிமு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. செப்பேடுகள் கி.பி ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் வட்டெழுத்து, தமிழ் எழுத்து இடம்பெற்றிருக்கின்றன.

கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்று அழைக்கப்பட்டன. இதனைச் சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் **'கண்ணெழுத்தப் படுத்த எண்ணுப் பல்பொதி'(சிலம்பு5 :113)** என்னும் பாடல் அடியால் அறியமுடிகிறது.

- **வரிவடிவ வளர்ச்சி**

பண்டைக்காலத்தில் தமிழ் மொழியிலுள்ள எல்லா எழுத்துகளும் நாம் இன்று எழுதுவது போன்ற வடிவத்தில் எழுதப்படவில்லை. அவை காலத்தின் தேவைக்கேற்பப் பல உருவ மாற்றங்களைப் பெற்றுத்தான் இக்கால வடிவத்தை

அடைந்திருக்கின்றன. இவ்வாறு எழுத்துகளில் மாற்றங்கள் ஏற்பட எழுதப்படும் பொருள்களின் தன்மை, அழகுணர்ச்சி போன்றவை காரணங்களாக அமைகின்றன.

பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை போன்றவற்றில் எழுதினர். அந்தந்தப் பொருள்களின் தன்மைக்கு ஏற்ப எழுத்துகளின் வடிவங்கள் அமைந்தன. பாறைகளில் செதுக்கும்போது வளைகோடுகளைப் பயன்படுத்த முடியாது என்பதால் நேர்க்கோடுகள் பயன்படுத்தப்பட்டன. ஓலைகளில் நேர்க்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது கடினம் என்பதால் வளைகோடுகளை அதிகமாகப் பயன்படுத்தினர். சில எழுத்துகளை அழகுபடுத்துவதற்காக அவற்றின் மேற்பகுதியில் குறுக்குக்கோடு இடப்பட்டது. பின்னர் அவையே நிலையான வடிவங்களாக அமைந்துவிட்டன.

- **புள்ளிகளும் எழுத்துகளும்**

எகர ஒகர குறில் எழுத்துகளைக் குறிக்க எழுத்துகளின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் தொல்காப்பியர் காலம் முதல் இருந்து வந்துள்ளது.

**எ.கா :**

எ் – குறில் ; எ – நெடில் ; ஒ் – குறில் ; ஒ – நெடில்.

அகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்துப் பக்கப்புள்ளி இடப்பட்டால் அவை நெடிலாகக் கருதப்பட்டன (க.=கா, ப.=பா). ஐகார எழுத்துகளைக் குறிப்பிட எழுத்துகளின்முன் இரட்டைப் புள்ளி வைத்துள்ளனர் (..ம=மை). எகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்து இரு புள்ளிகள் இடப்பட்டால் அவை ஔகார வரிசை எழுத்துகளாகக் கருதப்பட்டன (பெ..=பௌ, செ..=சௌ). மகர எழுத்தைக் குறிப்பிடப் பகர எழுத்தின் உள்ளே புள்ளி (ப்) இட்டனர். குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளைக் குறிக்க அவற்றின் மேலேயும் புள்ளி இட்டனர்.

- **உருவ மாற்றம்**

நெடிலைக் குறிக்க ஒற்றைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் (ா) பயன்படுத்தப்படுகிறது. ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக்கொம்பு (ை) பயன்படுத்தப்படுகிறது. ஔகார உயிர்மெய்யைக் குறிக்க

எழுத்துக்குப் பின் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் கொம்புக்கால் (ள) பயன்படுத்தப்படுகிறது. குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின் மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் வழக்கொழிந்துவிட்டது.

- **எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை**

ஓலைச்சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர். ஓலைச்சுவடிகளில் நிறுத்தற் குறிகளும் பத்தி பிரித்தலும் கிடையாது. புள்ளி இடப்பட்டு எழுதவேண்டிய எழுத்துகள் புள்ளிகள் இல்லாமல் எழுதப்படும்போது அவற்றின் இடம்நோக்கி மெய்யா, உயிர்மெய்யா, குறிலா, நெடிலா என உணர வேண்டிய நிலை இருந்தது. இதனால் படிப்பவர்கள் பெரிதும் குழப்பமுற்றனர். எனவே எழுத்துச் சீர்திருத்தம் தேவையானது.

- **எழுத்துச் சீர்திருத்தம்**

தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர். எகர ஒகர வரிசை எழுத்துகளின் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை நீக்கினார். 'எ' என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு 'ஏ' என்னும் நெடிலாகவும் 'ஒ' என்னும் எழுத்திற்குச் சுழி இட்டு 'ஓ' என்னும் எழுத்தாகவும் உருவாக்கினார். அதுபோல ஏகார ஓகார வரிசை உயிர்மெய் நெடில் எழுத்துகளைக் குறிக்க இரட்டைக்கொம்பு (ே),இரட்டைக் கொம்புடன் கால் சேர்த்து (ோ) புதிய வரிவடிவத்தை அறிமுகப்படுத்தினார். வீரமாமுனிவரின் எழுத்துச் சீர்திருத்தம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எ் | எ | ஒ் | ஒ | கெ் | கெ | கொ் | கொ |
| எ | ஏ | ஒ | ஓ | கெ | கே | கொ | கோ |

- **பெரியார் எழுத்துச் சீர்திருத்தம்**

இருபதாம் நூற்றாண்டுவரை ணா, றா, னா ஆகிய எழுத்துகளை ணா, றா, னா என எழுதினர். அதே போல ணை, லை, ளை, னை ஆகிய எழுத்துகளை ணை, லை, ளை, னை என எழுதினர். இவற்றை அச்சுக் கோப்பதற்காக இவ்வெழுத்துகளுக்குத் தனி அச்சுகள் உருவாக்கப்பட வேண்டியிருந்தது. இக்குறைகளை நீக்குவதற்காகத் தந்தைபெரியார்

எழுத்துச் சீர்திருத்தம் செய்தார். அவரது எழுத்துச் சீர்திருத்தங்கள் சில ஏற்கப்பட்டு அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

காலந்தோறும் ஏற்பட்ட வரிவடிவ வளர்ச்சி காரணமாகத் தமிழ் மொழியைப் பிற மொழியினரும் எளிதில் கற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்மொழிக் கணினிப் பயன்பாட்டிற்கு ஏற்ற மொழியாகவும் மாறியுள்ளது.

## 1.2 தமிழ் எழுத்துகளின் வகை

### தமிழ் எழுத்துகளின் வகை

நாம் தமிழைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் வேண்டும். அதற்குத் தமிழ்ச் சொற்களின் முறைகளை அறிய வேண்டும். தமிழின் தன்மைகளையும், மரபுகளையும் விதிப்படி அறிந்து பேசுவதற்கும் எழுதுவதற்கும் கருவியாக இருப்பதே இலக்கண நூலாகும். இலக்கு = குறிக்கோள்; அணம் = அழகு. எனவே, அழகைக் குறிக்கோளாகக் கொண்டது இலக்கணம் எனப்படும். எழுத்துகளின் வடிவம், பேசும்போது ஒலி வடிவிலும், எழுதும்போது வரிவடிவிலும் இருக்கும்.

தமிழ் எழுத்துகள் இருவகைப்படும். அவை முதலெழுத்து, சார்பெழுத்து என்பனவாகும்.

### 1.2.1 முதலெழுத்துகள்

உயிரெழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகளும் தமிழ்மொழிக்கு அடிப்படையான முதல் எழுத்துகளாகும். உயிர்மெய் எழுத்துகள் தோன்றுவதற்கு இந்த எழுத்துகளே அடிப்படையாக உள்ளன. ஆகையால், இவை முதலெழுத்துகள் எனக் குறிக்கப்படுகின்றன.

- **உயிரெழுத்துகளின் வகை**

**அ** முதல் **ஔ** வரை உள்ள பன்னிரண்டும் உயிர் எழுத்துகள்.

உயிர் எழுத்துகளை இருவகையாகப் பிரிக்கலாம். அவை குறில் எழுத்து, நெடில் எழுத்து என்பனவாகும். குறுகிய ஓசையை உடைய எழுத்துகள் குறில் எனவும், நீண்ட ஓசையை உடைய எழுத்துகள் நெடில் எனவும் குறிக்கப்படுகின்றன.

| உயிர் எழுத்து – 12 | |
|---|---|
| **குறில்** | **நெடில்** |
| அ | ஆ |
| இ | ஈ |
| உ | ஊ |
| எ | ஏ |
| – | ஐ |
| ஒ | ஓ |
| – | ஔ |
| 5 | 7 |

- **மெய்யெழுத்துகளின் வகை**

**க்** முதல் **ன்** வரை உள்ள பதினெட்டும் மெய்யெழுத்துகள்.

மெய்யெழுத்துகள் மூன்று வகைப்படும். அவை வல்லினம், மெல்லினம், இடையினம் என்பனவாகும்.

**க், ச், ட், த், ப், ற்** என்னும் ஆறும் வல்லினம் எனப்படுகின்றன. இவை வன்மையான ஓசையை உடையதால் இப்பெயர் பெற்றன.

**ங். ஞ், ண், ந், ம், ன்** என்னும் ஆறும் மெல்லினம் எனப்படுகின்றன. இவை மென்மையான ஓசையை உடையதால் இப்பெயர் பெற்றன.

**ய், ர், ல், வ், ழ், ள்** என்னும் ஆறும் இடையினம் எனப்படுகின்றன. இவை வன்மையாகவும் இல்லை; மென்மையாகவும் இல்லை. இரண்டிற்கும் இடைப்பட்ட தன்மையை உடையதால் இப்பெயர் பெற்றன.

- **மாத்திரை / எழுத்தை ஒலிக்கும் கால அளவு**

பொதுவாக, தமிழ் எழுத்துகளை ஒலிக்கும் போது ஓர் எழுத்தை ஒலிப்பதற்கு நாம் எடுத்துக்கொள்ளும் கால அளவை காணிப்பதற்கு "மாத்திரை" என்ற சொல்லாட்சியில் இலக்கண நூலார் குறிப்பிட்டுள்ளனர். எழுத்துகளை ஒலிப்பதற்குரிய கால அளவு மாத்திரை எனப்படும். இயல்பாக நாம் 'கண்' இமைக்கும் நேரம் அல்லது 'கை' நொடிக்கும் நேரம் ஒரு மாத்திரைக்குரிய கால அளவாகும். இதனையே,

கால், அரை, முக்கால் ஆகிய மாத்திரை அளவுகளையும் தமிழ் இலக்கண நூற்பா ஒன்று வரையறுத்துக் கூறுகிறது.

**'உன்னல் காலே ஊன்றல் அரையே**
**முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே'**

| | |
|---|---|
| 1. உன்னல் (நினைத்தல்) | – ¼ மாத்திரை |
| 2. ஊன்றல் (கட்டைவிரலும் நடு விரலும் ஒன்றையொன்று பொருந்துதல்) | – ½ மாத்திரை |
| 3. முறுக்கல் (கட்டை விரலும் நடு விரலும் ஒன்றையொன்று அழுத்தமாக உரசுதல்) | – ¾ மாத்திரை |
| 4. விடல் (கட்டை விரலும் நடு விரலும் ஒன்றையொன்று வேகமாக விலகுதல்) | – 1 மாத்திரை |

தமிழ் எழுத்துகளுக்கான மாத்திரை பின்வருமாறு:

| வரிசை எண் | தமிழ் எழுத்துகள் | மாத்திரை |
|---|---|---|
| 1. | உயிர்க் குறில் (அ, இ, உ, எ, ஒ) | 1 மாத்திரை |
| 2. | உயிர்மெய்க் குறில் (க, ங, ச … ன.) | 1 மாத்திரை |
| 3. | உயிர் நெடில் (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ) | 2 மாத்திரை |
| 4. | உயிர்மெய் நெடில் (கா, ஙா, சா ….னா) | 2 மாத்திரை |
| 5. | மெய்யெழுத்து (க். ங், ச், …) | ½ மாத்திரை |
| 6. | ஆய்தம் (ஃ) | ½ மாத்திரை |
| 7. | குற்றியலுகரம் | ½ மாத்திரை |
| 8. | குற்றியலிகரம் | ½ மாத்திரை |
| 9. | ஐகாரக் குறுக்கம் | சொல்லின்முதலில் 1 ½ இடையிலும் கடையிலும் 1 மாத்திரை |
| 10. | ஔகாரக் குறுக்கம் | 1½ மாத்திரை |
| 11. | மகரக் குறுக்கம் | ¼ மாத்திரை |
| 12. | ஆய்தக் குறுக்கம் | ¼ மாத்திரை |
| 13. | உயிரளபெடை | 3 மாத்திரை |
| 14. | ஒற்றளபெடை | 1 மாத்திரை |

### 1.2.2 சார்பெழுத்து

தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாமல், பிற எழுத்துகளைச் சார்ந்தே இயங்கும் தன்மையுடைய எழுத்துகள் சார்பெழுத்துகள் எனப்படுகின்றன. அவை பத்து வகைப்படும். அவை :- உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என்பனவாகும்.

- **உயிர்மெய் எழுத்துகள் – 216**

பதினெட்டு மெய்யெழுத்துகளுடன் பன்னிரண்டு உயிர்யெழுத்துகள் புணர்வதால் (சேர்வதால்) பிறக்கும் எழுத்துகள் உயிர்மெய் எழுத்துகள் எனப்படும் (18 x 12 = 216). அவ்வுயிர்மெய் எழுத்துகளை ஒலிக்கும்போது மெய்யொலி முன்னும் உயிரொலி பின்னும் ஒலிக்கும்..

**எ.கா :**

| | | | |
|---|---|---|---|
| க் + அ = க | க் + ஆ = கா | க் + இ = கி | க் + ஈ = கீ |
| க் + உ = கு | க் + ஊ = கூ | க் + எ = கெ | க் + ஏ = கே |
| க் + ஐ = கை | க் + ஒ = கொ | க் + ஓ = கோ | க் + ஔ = கௌ |

இவ்வாறே, மற்றைய மெய்யெழுத்துகளுடன் பன்னிரண்டு உயிர் எழுத்துகள் புணர்வதால் எஞ்சியுள்ள உயிர்மெய் எழுத்துகள் பிறக்கின்றன. எனவே, உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கை 12 x 18 = 216 ஆகும்.

- **ஆய்தம் / முற்றாய்தம்**

மூன்று புள்ளி (ஃ) வடிவுடைய எழுத்து ஆய்த எழுத்து எனப்படும். இது, தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாதது; தனக்கு முன்னே ஒரு குறில் எழுத்தையும், பின்னே ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் துணையாகக் கொண்டு இயங்கும்.

- ஆய்த எழுத்தை அக்கேனம், அஃகேனம், தனிநிலை, புள்ளி, ஒற்று, முப்பாற்புள்ளி, நடுவாய்தம், முற்றாய்தம், அஃகன்னா, அடுப்பெழுத்து போன்ற பெயர்களையும் முன்னோர்கள் வழங்கிவந்துள்ளனர்; இருப்பினும் 'ஆய்தம்' என்று அழைப்பதே வழக்கில் உள்ளது.

- தமிழ்நெடுங்கணக்கு அல்லது அகரச்சுவடியில் (Alphabet) உயிர் எழுத்துகள் (அ–ஔ) நிறைவுற்ற பின்னும், மெய் எழுத்துகள் (க் – ன்) தொடங்குவதற்கு முன்னும் இரண்டிற்கும் இடைப்பட்டதாக இந்த ஆய்த எழுத்தின் இடம் அமையும்.

- ஆய்த எழுத்து பின் நா – பின் அண்ண – ஒலிப்புடை – உரசொலியாக (velar – voiced – fricative) ஒலிக்கும். ஹ் அல்லது h என்னும் ஒலிகளை ஏழுபுடை ஒத்து ஒலித்தாலும், அதைவிட நுட்பம் வாய்ந்தது ஆய்தம். (எ.கா.) அஃறிணை, பஃறொடை, ஏ.ஆர்.ரஃமான். இக்காலத்தில் தனக்குப் பின் வரும் வல்லொலியை நலிவுறச் செய்வதற்கும் ஆய்த எழுத்து பயன்படுகிறது. Coffee – காஃபி, Felix – ஃபெலிக்ஸ்

- ஆய்தம் தோன்றுமிடங்களை எட்டாகக் காட்டுவர் இலக்கணப் புலவர்கள்.

- குறிலுக்குப் பின்னும், உயிரொடு கூடிய (ஆறு) வல்லெழுத்துக்கு முன்னும் ஆய்தம் தோன்றும். (இவ்வகையில் ஆய்தம் தோன்றிமிடங்கள் 6) எஃகு, கஃசு (ஓர் எடை அளவு), கஃகு (பழைய உரையாசிரியர்களால் காட்டப்படுகிறது, பொருள் விளங்கவில்லை), அஃது, கஃபு (பழைய உரையாசிரியர்களால் காட்டப்படுகிறது, பொருள் விளங்கவில்லை), பஃறி (ஓடம், பன்றி)

- திரிதல் என்னும் புணர்ச்சி விகாரத்தால் வரும் ஆய்தம் (1) அவ் + கடிய = அஃகடிய

- விரித்தல் என்னும் செய்யுள் விகாரத்தால் வரும் ஆய்தம் (1) அ + கான் = அஃகான்

- உயிரளபெடை

செய்யுளில் மொழிக்கு முதலிலும் இடையிலும், இறுதியிலும் நிற்கிற உயிர் நெட்டெழுத்துகளின் (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ) இனமான குற்றெழுத்துகள் அவற்றின் பின்னால் வரும். இவ்வாறு வருவது உயிரளபெடை எனப்படும். உயிர்நெடில் எழுத்துகளில் ஏதேனும் ஒன்று தனக்குரிய ஒலிக்கும் கால அளவாகிய 2 மாத்திரையிலிருந்து 3 மாத்திரையாக மிகுந்து ஒலிக்கும். இவ்வுயிரளபெடை முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களிலும் அளபெடுக்கும். உயிரளபெடை மூன்று வகைப்படும்

**செய்யுளிசை அளபெடை –** செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைசெய்ய, நெட்டெழுத்துகள் அளபெடுத்தலைச் செய்யுளிசை அளபெடை என்பர். இதனை இசைநிறை அளபெடை என்றும் கூறுவர்.

**எ.கா :**

**ஓஒ**தல் வேண்டும் – மொழி முதல்
உறா**அர்க்**கு – மொழியிடை
நல்ல படாஅ பறை – மொழியிறுதி

**இன்னிசை அளபெடை –** செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காகக் குறில் நெடிலாக மாறி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

**எ.கா :**

கெடுப்ப**தூஉம்** கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்ப**தூஉம்** எல்லாம் மழை

**சொல்லிசை அளபெடை –** செய்யுளில் ஒரு பெயர்ச்சொல்லை எச்சச் சொல்லாக மாற்றுவதற்காக அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்.

**எ.கா :**

உரனந**சைஇ** உள்ளம் துணையாகச் சென்றார்
வரன்ந**சைஇ** இன்னும் உளேன்

(நசை – விருப்பம்; விரும்பி என்னும் பொருள் தருவதற்காக நசைஇ என அளபெடுத்தது. பெயர்ச்சொல், வினையெச்சமாக மாறியது.)

- **ஒற்றளபெடை**

செய்யுளில் ஓசை குறையும்போது, அவ்வோசையை நிறைவு செய்வதற்காகத் தனிக்குறிலையோ, இணைக்குறிலையோ சார்ந்து வரும் பத்து ஒற்றெழுத்துகளில் ஏதேனும் ஒன்று (ங், ஞ், ண், ந், ம், ன், ய, ல, வ, ள்), தனக்குரிய ஒலிக்கும் கால அளவாகிய ½ மாத்திரையிலிருந்து 1 மாத்திரையாகச் சொல்லின் இடையிலும், கடையிலும் மிகுந்து ஒலிக்கும். இவ்வாறு ஒற்றெழுத்து மிகுந்து ஒலிப்பது ஒற்றளபெடை எனப்படும். ஆய்த எழுத்தும் (ஃ) தனிக்குறிலையோ, இணைக்குறிலையோ சார்ந்து, சொல்லின் இடையிலும் கடையிலும் தனக்குரிய ½ மாத்திரையிலிருந்து 1 மாத்திரையாக மிகுந்து ஒலிக்கும். இந்தப் பதினோர் எழுத்தும் அளபெடுத்தமைக்கு அடையாளமாக, அதனதன் எழுத்தே அருகில்

தோன்றி நிற்கும். ஆய்தம் (ஃ) தனிக்குறிலையும், இணைக்குறிலையும் அடுத்து மொழிக்கு இறுதி எழுத்தாக அமையாது.

**எ.கா :**

**எஙங்** இறைவன் உளன் என்பாய் மனனேயான்
எஃஃகிலங்கிய

- **குற்றியலுகரம்**

**'உ'** என்னும் உயிர்க்குறில் எழுத்து, வல்லொற்று ஆறனுடன் (க் + உ = கு, ச் + உ = சு, ட் + உ = டு, த் + உ = து, ப் + உ = பு, ற் + உ = று) புணரும்போது, அவ்வொற்றெழுத்துகள் **கு, சு, டு, து, பு, று** என மாறும். இவற்றுள் ஏதேனும் ஓர் எழுத்து, ஒரு சொல்லிற்கு உறுப்பாக இறுதியில் அமைந்து ஒலிக்கும்போது, அவ்வெழுத்து தனக்குரிய ஒலிக்கும் கால அளவாகிய 1 மாத்திரையிலிருந்து ½ மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு, வல்லொற்று ஆறனுடன் புணர்ந்த உகரம் தனக்குரிய ஒலிக்கும் கால அளவிலிருந்து குறைந்து ஒலிப்பது (1 மாத்திரையிலிருந்து ½ மாத்திரையாக) குற்றியலுகரம் எனப்படும். சொற்களை உச்சரிக்கும்போது மட்டுமே ஓசைக் குறைப்பாட்டை உணரமுடியும். ஓசை குறைந்து ஒலிப்பதைக் குறித்துக் காட்டத் தனி வரிவடிவம் இன்றைய தமிழில் இல்லை. இத்தகைய சொல்லின் ஈற்றயல் எழுத்தை (இறுதி எழுத்துக்கு முன் எழுத்து) அடிப்படையாகக் கொண்டு, குற்றியலுகரகம் ஆறு வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை :

1. நெடில் தொடர்க் குற்றியலுகரம் – ஆடு, காடு, காது, சோறு
2. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் – அஃது, இஃது
3. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் – அழகு, அரசு, மரபு
4. வன்தொடர்க் குற்றியலுகரம் – பாக்கு. பத்து, உப்பு
5. மென்தொடர்க் குற்றியலுகரம் – பஞ்சு, வண்டு, பந்து, அம்பு
6. இடைத்தொடர்க் குற்றியலுகரம் – செய்து, சால்பு, மார்பு

- **குற்றியலிகரம்**

**கு, சு, டு, து, பு, று** என்னும் எழுத்துகளை இறுதியாக உடைய சொற்களுடன், **'யா'** என்னும் எழுத்தை முதலாக உடைய சொல் புணரும்போது, கு, சு, டு, து, பு, று முறையே கி, சி, டி, நி, பி, றி எனத் திரியும். இவ்வெழுத்துகளில் உள்ள 'இ' என்னும் எழுத்து (க் + இ = கி, ச் + இ = சி, ட் + இ = டி, த் + இ = தி, ப் + இ = பி, ற் + இ = றி) தனக்குரிய ஒலிக்கும் கால அளவாகிய 1 மாத்திரையிலிருந்து 1/2 மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிப்பது

குற்றியலிகரம் எனப்படும். சொற்களை உச்சரிக்கும்போது மட்டுமே குற்றியலிகரத்தை உணரமுடியும். குற்றியலிகரத்திற்கென தனி வரிவடிவ எழுத்து இன்றைய தமிழில் இல்லை.

குறிப்பு : குற்றியலுகரச் சொற்களுடன் **'யா'** என்னும் எழுத்தை முதலாக உடைய சொல் புணரும்போது, குற்றியலுகரம் குற்றியலிகரமாக மாறும்.

**எ.கா :**

| வ. எண் | குற்றியலிகரச் சொற்கள் | + | யா என்னும் எழுத்தை முதலாக உடைய சொல் | குற்றியலிகரமாக மாறுதல் |
|---|---|---|---|---|
| 1. | கொக்கு (வ.கு.) | + | யாது ? | கொக்கியாது ? |
| 2. | பஞ்சு (மெ.கு.) | + | யாது ? | பஞ்சியாது ? |
| 3. | இயல்பு (இ.கு.) | + | யாது ? | இயல்பியாது ? |
| 4. | அஃது (ஆ.கு.) | + | யாது ? | அஃதியாது ? |
| 5. | பயறு (உ.கு.) | + | யாது ? | பயறியாது ? |
| 6. | நாடு (நெ.கு.) | + | யாது ? | நாடியாது ? |

மேலும், கேண்மியா (கேள் + மியா), சென்மியா (செல் + மியா) என்னும் அசைச்சொற்களில் உள்ள 'மி' (ம் + இ = மி) என்னும் எழுத்து தனக்குரிய ஒலிக்கும் கால அளவாகிய 1 மாத்திரையிலிருந்து ½ மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு 'ம்' என்னும் ஒற்றெழுத்தின் மேல் புணர்ந்த இகரம் தனக்குரிய மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிப்பது குற்றியலிகரம் எனப்படும்.

இவ்வாறாக, குற்றியலுகரச் சொற்கள் முப்பத்தாறனுடன், 'யா' என்னும் எழுத்தை முதலாக உடைய சொல் புணர்வதால் தோன்றும் குற்றியலிகரச் சொற்கள் முப்பத்தாறு ஆகும். அவற்றுடன் 'மியா' என்னும் அசைச்சொல்லில் தோன்றும் குற்றியலிகரம் ஒன்றையும் சேர்க்க, குற்றியலிகரத்தின் மொத்த எண்ணிக்கை முப்பத்தேழாகும் என்பதை அறிக.

- **ஐகாரக் குறுக்கம்**

**'ஐ'** என்னும் எழுத்து, சொல்லின் முதலிலோ, இடையிலோ, இறுதியிலோ வரும்பொழுது, அது தனக்குரிய ஒலிக்கும் கால அளவாகிய 2 மாத்திரை அளவிலிருந்து முறையே 1 ½, 1 எனக் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு 'ஐ' தனக்குரிய மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிப்பது ஐகாரக் குறுக்கம்

எனப்படும். இச்சொற்களை ஒலிக்கும் போது மட்டுமே இந்த ஓசைக் குறைபாட்டை உணரமுடியும்.

1. ஐப்பசி – இச்சொல்லின் முதலில் உள்ள 'ஐ' 1 ½ மாத்திரை அளவில் ஒலித்துள்ளது.
2. வளையல் – இச்சொல்லின் இடையில் உள்ள 'ஐ' (ள் + ஐ = ளை) 1 மாத்திரை அளவில் ஒலித்துள்ளது.
3. தவளை – இச்சொல்லின் இறுதியில் உள்ள 'ஐ' (ள் + ஐ = ளை) 1 மாத்திரை அளவில் ஒலித்துள்ளது.

எனவே, ஐகாரக்குறுக்கம் மூவகைப்படும்.

- **ஔகாரக்குறுக்கம்**

**'ஔ'** என்னும் எழுத்து. சொல்லின் முதலில் மட்டுமே வரும். சொல்லின் இடையிலும், இறுதியிலும் வராது. அவ்வாறு, சொல்லின் முதலில் வரும்போது, தனக்குரிய ஒலிக்கும் கால அளவாகிய 2 மாத்திரை அளவிலிருந்து 1½ மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு, 'ஔ' என்னும் எழுத்து தனக்குரிய மாத்திரை அளவில் குறைந்து ஒலிப்பது ஔகாரக் குறுக்கம் எனப்படும்.

**எ.கா :**

ஔவையார், மௌவல் (பூ), வௌவினை (தீவினை)

மேற்கண்ட சொற்களின் முதலில் உள்ள 'ஔ' (ம் + ஔ = மௌ), (வ் + ஔ = வௌ) என்னும் எழுத்து தனக்குரிய ஒலிக்கும் கால அளவாகிய 2 மாத்திரையிலிருந்து 1 ½ மாத்திரையாகக் குறைந்து ஒலித்துள்ளது. இச்சொற்களை ஒலிக்கும்போது மட்டுமே இந்த ஓசைக் குறைபாட்டை உணரமுடியும்.

- **மகரக் குறுக்கம்**

**'ண், ன்'** என்னும் ஒற்றெழுத்துகளின் பின்னால் **'ம்'** என்னும் ஒற்றெழுத்து ஒலிக்கும்போது, 'ம்' தனக்குரிய ஒலிக்கும் கால அளவாகிய ½ மாத்திரை அளவிலிருந்து ¼ மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும்.

இவ்வாறு மகரமெய் (ம்) தனக்குரிய மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிப்பது மகரக்குறுக்கம் எனப்படும்.

**எ.கா :**

1. போன்ம் (போலும்)

2. மருண்ம் (மருளும்)

மேலும், ஏதேனும் ஒரு சொல்லின் இறுதியில் மகர ஒற்று (ம்) அமைந்து, அச்சொல்லை அடுத்து வரும் வருமொழியின் முதல் எழுத்தாக வகரம் (வ) வந்தால், மகர ஒற்று (ம்) தனக்குரிய ஒலிக்கும் கால அளவாகிய ½ மாத்திரையிலிருந்து ¼ மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிப்பதும் மகரக்குறுக்கம் என்றே வழங்கப்படும். எனவே, மகரக் குறுக்கத்தின் எண்ணிக்கை மூன்றெனக் கொள்க.

எ.கா :

வரும் வண்டி, தரும் வளவன்

மேற்கண்ட சொற்களை உச்சரிக்கும்போது மட்டுமே இந்த ஓசைக் குறைபாட்டை உணரமுடியும்.

- **ஆய்தக் குறுக்கம்**

**ல், ள்** என்னும் இவ்விரு ஒற்றெழுத்துகள், ஒரு சொல்லின் இறுதி எழுத்தாகத் தனிக்குறிலை மட்டும் சார்ந்து நிற்கும்போது, அச்சொல்லுடன் தகரத்தை முதலாக உடைய சொல் வந்து புணரும்போது, ல், ள் இவ்விரு எழுத்துகள் ஆய்தமாகத் (ஃ) திரியும். இப்புணர்ச்சியால் உண்டான அப்புதிய சொல்லை உச்சரிக்கும்போது, அதில் உள்ள ஆய்த எழுத்து தனக்குரிய ½ மாத்திரை அளவிலிருந்து குறைந்து ¼ மாத்திரை அளவே ஒலிக்கும். இதுவே ஆய்தக் குறுக்கம் எனப்படும்.

எ.கா :

கல் + தீது = கஃறீது

முள் + தீது = முஃறீது

மேற்கண்ட சொற்களில் உள்ள ஆய்த எழுத்து தனக்குரிய ஒலிக்கும் கால அளவாகிய ½ மாத்திரையிலிருந்து ¼ மாத்திரையாகக் குறைந்து ஒலித்துள்ளது. இச்சொற்களை உச்சரிக்கும்போது மட்டுமே ஓசைக்குறைபாட்டை உணரமுடியும்.

### 1.2.3 இன எழுத்து

எழுத்துகள் பிறக்கும் இடம், ஒலிக்கும் முயற்சி, ஒலிக்கும் கால அளவு, பொருள், வடிவம் ஆகியவற்றில் ஒன்று மற்றொன்றுடன் ஏதேனும் ஒரு

வகையில் ஒத்திருந்தால் அவை இன எழுத்துகள் எனப்படும். உயிர்க்குறில் எழுத்துகளுக்கு அவற்றின் நெடில் எழுத்துகள் இனமாகும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | இ | உ | எ | ஐ | ஒ | ஔ |
| ஆ | ஈ | ஊ | ஏ | இ | ஓ | உ |

ஐ – இகரத்தையும். ஔ – உகரத்தையும் இனமாகக் கொண்டுள்ளன.

மேற்கண்ட எழுத்துகள் வடிவத்திலும், ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒத்திருப்பதைக் காண்க.

| | |
|---|---|
| க், ச், ட், த், ப், ற் | வல்லினம் |
| ங், ஞ், ண், ந், ம், ன் | மெல்லினம் |
| ய், ர், ல், வ், ழ், ள் | இடையினம் |

மெய்யெழுத்துகள் பிறக்கும் இடம், ஒலிக்கும் முயற்சி ஆகியவற்றால் மூவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

உயிர் எழுத்துகளில் குறில் எழுத்துக்கு இன எழுத்தாக உயிர் நெடில் எழுத்து இருப்பதைப் போல, மெய்யெழுத்துகளில் வல்லின எழுத்திற்கு இன எழுத்தாக மெல்லின எழுத்து அமைந்துள்ளது.

எ.கா :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | ச் | ட் | த் | ப் | ற் |
| ங் | ஞ் | ண் | ந் | ம் | ன் |

ய், ர், ல், வ், ழ், ள் என்னும் இடையின எழுத்துகள் ஆறும் ஓரினமாம் ; அதாவது, ஓர் எழுத்துக்கு மற்ற ஐந்தும் இனமாம்.

### 1.2.4 சுட்டெழுத்து

பிறவற்றைச் சுட்டுவதற்காகச் சுட்டுப்பொருள் தந்து நிற்கும் எழுத்துகள், சுட்டெழுத்துகள் எனப்படும். அவை, அ, இ, உ என்பன.

அவன், அவள், அவர், அது, அவை, இவன், இவள், இவர், இது, இவை

உகரச்சுட்டு (உவன், உவள், உவர், உது, உவை) இன்று வழக்கில் இல்லை.

'இ' என்பது, பக்கத்தில் உள்ளதைச் சுட்டிக்காட்டுவதற்கு வரும் எழுத்து. அதனால், 'இ' என்பது அண்மைச் சுட்டு என்று அழைக்கப்படுகிறது.

இவன், இவள், இவர், இது, இவை

'அ' என்பது, தொலைவில் உள்ளவற்றைச் சுட்டிக்காட்டுவதற்கு வரும் எழுத்து. அதனால் 'அ' என்பது சேய்மைச் சுட்டு. (சேய்மை – தொலைவு)

அவன், அவள், அவர், அது, அவை

அந்த, இந்த, அங்கு, இங்கு என வருவன எல்லாம் சுட்டுத் திரிபுகள் எனப்படும். 'உ' என்ற எழுத்து இடைமைச் சுட்டு எழுத்து. ஆனால், இது தற்காலப் பயன்பாட்டில் இல்லை.

- **அகச்சுட்டு**

ஒருசொல்லின் அகத்தே (உள்ளே) நின்று சுட்டுப்பொருளைத் தருவது **அகச்சுட்டு** எனப்படும்.

**சான்று :**

**அ**வன், **அ**வள், **அ**வர், **அ**து, **அ**வை

**இ**வன், **இ**வள், **இ**வர், **இ**து, **இ**வை

**உ**து, **உ**வன்.

அகச்சுட்டுச் சொற்களிலிருந்து சுட்டெழுத்தை நீக்கினால் அச்சொல் பொருள் தராது.

**அ** + வள்

**இ** + வள்

**அ** + வன்

**இ** + வன்

**அ** + து

**இ** + து

**அ** + வை

**இ** + வை

- **புறச்சுட்டு**

ஒரு சொல்லின் புறத்தே (வெளியே) நின்று சுட்டுப்பொருளைத் தருவது **புறச்சுட்டு** ஆகும்.

**சான்று :**

அப்பையன், அவ்வீடு, அக்குளம்.
இப்பையன், இவ்வீடு, இக்குளம்
உப்பக்கம்.

புறச்சுட்டு சொற்களைப் பிரித்தாலும் பொருள் தரும்.

அ + பையன்
இ + பையன்
அ + வீடு
இ + வீடு
அ + குளம்
இ + குளம்
உ + பக்கம்

### 1.2.5 வினா எழுத்துகள்

**'எ', 'யா', 'ஆ', 'ஓ', 'ஏ'** ஆகிய ஐந்து எழுத்தும் வினாப்பொருளில் வருகின்ற எழுத்துகளாகும்.

எவன்? யார்? அவனா? அவளோ? யானே?

இவ்வாறு எடுத்துக்காட்டுகள் அமையும். இவற்றுள், **'எ', 'யா'** ஆகிய இரண்டும் சொல்லின் முதலில் நின்று வினாப் பொருள் தரும்.

எவன்? – யாவன்?
எவள்? – யாவள்?
எவர்? – யாவர்?
எவை? – யாவை?
எது? – யாது?

'ஆ', 'ஓ' – ஆகிய இரண்டும் சொல்லின் இறுதியில் நின்று வினாப்பொருள் தரும்.

அவனா? – அவனோ?

அவளா? – அவளோ?

அதுவா? – அதுவோ?

அவையா? – அவையோ?

'ஏ' என்னும் எழுத்து, சொல்லுக்கு முதலிலும், சொல்லுக்கு இறுதியிலும் நின்று வினாப் பொருள் தரும்.

ஏன்? – யானே?

ஏது ? – அவனே?

- **அகவினா**

சொல்லின் உள்ளே நின்று வினாப்பொருள் தந்தால் அகவினா ஆகும். அந்த வினா எழுத்தை நீக்கினால் சொல்லுக்குப் பொருள் இராது.

**சான்று :**

யார்? எது? ஏன்?

- **புறவினா**

சொல்லின் வெளியே நின்று வினாப்பொருள் தந்தால் புறவினா ஆகும். அந்த வினா எழுத்தை நீக்கினாலும் சொல்லுக்குப் பொருள் இருக்கும்.

**சான்று :**

அவனா? ( ன்+ ஆ)?, இவன்தானே (ன்+ஏ)?, எவ்வூர்? (எ+ஊர்)?

### 1.2.6 எழுத்துகளின் பெயர்கள்

ஒருவரைத் தனியாக அடையாளப்படுத்திக் காட்டுவது அவருடைய பெயர். பெயரில்லாமல் யாருமே இருக்க முடியாது. அதுபோல, எழுத்துகளுக்கும் பெயர்கள் உண்டு. எடுத்துக்காட்டாக, 'க' என்னும் எழுத்தைக் கூறும்போது, 'ககரம்' எனக் கூறவேண்டும். அதே போல் 'ஏ' என்னும் எழுத்தைக் கூறும்போது, 'ஏகாரம்' எனக் கூறவேண்டும். இவ்வாறு எழுத்துகளுடன் கரம், காரம், கான் எனச் சாரியைச் சேர்த்துச் சொல்வோம்.

இங்கு, மயங்கொலி எழுத்துகளுக்குரிய பெயர்களை அறிவோம்.

| | |
|---|---|
| **'ல'** | நுனி நா லகரம் என்று ஒலிப்பு அடிப்படையில் இது அழைக்கப்படுகிறது. மேலும் **தனி லகரம்** என்றும் கூறுவர். |
| **'ள'** | நா மடி 'ளகரம் என்று கூறுவர். இதனைப் **பொது ளகரம்** என்றும் கூறுவர். |
| **'ழ'** | இதன் பெயர் நாம் அனைவரும் நன்கு அறிந்ததே. தமிழுக்கே தனிச்சிறப்பு சேர்க்கும் எழுத்து என்பதால் இதைச் **சிறப்பு ழகரம்** என்று அழைக்கிறோம். |
| **'ண'** | மூன்று சுழி 'ண' என்று நாம் அழைக்கின்றோம். ஆனால், இதன் இன எழுத்தான டகரத்தோடு இணைத்துச் சொல்லவேண்டும். ஏனென்றால் இந்த இரண்டு எழுத்தும் ஒரே இடத்திலேயே பிறக்கின்றன. எனவே இதனை **டண்ணகரம்** என்று கூறுதல் வேண்டும். |
| **'ந'** | தகரமும் நகரமும் ஒரே இடத்தில் பிறப்பதால் **தந்நகரம்** என்று இது அழைக்கப்பெறும். |
| **'ன'** | இரண்டு சுழி னகரம் என்று இதனை நாம் கூறுவோம். இருசுழி னகரம் என்றும் இது அழைக்கப்படும். டண்ணகரத்தைப் போலவே **றன்னகரம்** என்று முன்னால் வரும் எழுத்தோடு சேர்த்து இது அடையாளப்படுத்தப்படும். ஏனென்றால் இவை இரண்டும் ஒரே இடத்தில் பிறக்கின்றன. |
| **'ர'** | இடையின எழுத்து என்பதால், **இடையின ரகரம்** என்று அழைக்கப்படும். |
| **'ற'** | வல்லின எழுத்து என்பதால், **வல்லின றகரம்** என்று அழைக்கப்படும். |

| **தன் மதிப்பீடு : வினாக்கள் – I** |
|---|
| 1. தமிழ் பிராமி – சிறு குறிப்பு வரைக. |
| 2. வட்டெழுத்து – சிறு குறிப்பு வரைக. |
| 3. முதலெழுத்துகளின் வகைகள் யாவை? |
| 4. சார்பெழுத்துகளின் வகைகள் யாவை? |
| 5. தமிழ் எழுத்துகளின் மாத்திரை அளவுகளைக் கூறுக. |
| 6. உயிரௌபடையின் வகைகள் யாவை? |

## 1.3 எழுத்துகளின் பிறப்பும் ஒலிப்பு முறைகளும்

### எழுத்துகளின் பிறப்பும் ஒலிப்பு முறைகளும்

மொழிக்கு அடிப்படையாக இருப்பது ஒலி. ஒலிகளை அடையாளக் குறியீடுகளாக அமைத்துக்கொண்டு, கருத்துகளை உணர்த்துதலே மொழி எனப்படுகிறது. இது பேச்சுமொழி, எழுத்துமொழி என இருவகைப்படும். ஒலிகளால் சொற்கள் அமைகின்றன. சொற்களால் தொடர்கள் அமைகின்றன. தமிழ்மொழிக்கு அடிப்படையாக உள்ள ஒலிகள் முதல் எழுத்துகள்

எனப்படுகின்றன. இவ்வெழுத்துகளின் ஒலி வடிவத்திற்கும் வரிவடிவத்திற்கும் உள்ள தொடர்பையும் அவை பிறக்கும் முறையையும் இப்பகுதியில் காணலாம்.

### 1.3.1 ஒலி வடிவ வரிவடிவத் தொடர்பு

தமிழ்மொழியில் ஒலி பிறப்பதற்கும் எழுத்துகளுக்கும் மாறுபாடில்லை. எடுத்துக்காட்டாக, அ, ம், மா என்னும் மூன்றெழுத்துகளின் ஒலிப்படியே அவற்றாலான அம்மா என்னும் சொல்லின் ஒலியும் உள்ளது. சொல்லின் ஒலிப்படியே எழுத்துகளும் உள்ளன.

### 1.3.2 எழுத்தொலிகள் பிறக்கும் முறை

எழுத்தொலிகள் பிறப்பதற்குக் காரணமான பேச்சுறுப்புகள் பற்றிக் காண்போம்.

நுரையீரல் சுருங்கி விரிவதால் ஏற்படும் காற்றோட்டங்களைப் பயன்படுத்திப் பேச்சுச் செயற்பாடு நிகழ்கிறது. நுரையீரல்கள் (Lungs), மூச்சுக்குழல் (Trachea), தொண்டை (Larynx), மேற்றொண்டை (Pharynx), வாயறை (Oral cavity), மூக்கறை (Nasal cavity) ஆகிய பகுதிகள் பேச்சுச் செயல்பாடுகளுக்கு அடிப்படையாக அமைகின்றன.

நா, இதழ் ஆகியன ஒலிகளை உருவாக்க உதவும் இயங்கு உறுப்புகள் (Active articulators) ஆகும். அண்ணம், பல் ஆகியன நிலை உறுப்புகள் (Passive articulators) எனப்படுகின்றன.

1. முன் அண்ணம்
2. இடையண்ணம்
3. கடையண்ணம்
4. உள்நாக்கு
5. மூக்கறை வாயில்
6. நுனிநா
7. நா விளிம்பு
8. இடை நா
9. கடை நா
10. அடி நா
11. முன்தொண்டை
12. காற்றுக்குழல் மூடி
13. ஒலித்தசை

14. குரல் வளை

15. காற்றுக் குழாய்

போன்ற உறுப்புகள் ஒலிப்பில் தம் பங்கை ஆற்றுகின்றன.

### 1.3.3 முதலெழுத்துகள் பிறக்கும் முறை

தமிழுக்கு அடிப்படையாக உள்ள முதலெழுத்துகளை உயிர், மெய் எனப் பிரிப்பர். நுரையீரலிலிருந்து வெளியேறும் காற்று எவ்விதத் தடையும் இல்லாமல் வெளியேறும் நிலையில் பிறக்கும் ஒலிகள் உயிரொலிகள் ஆகும். நுரையீரலிலிருந்து வெளியேறும் காற்று முற்றிலுமாகவோ பகுதியாகவோ தடைபட்டு வெளியேறும் நிலையில் பிறக்கும் ஒலிகள் மெய்யொலிகள் ஆகும்.

- **உயிர் எழுத்துகளை ஒலிக்கும் முறை**

முதலில் உயிர் எழுத்துகள் எவ்வாறு ஒலிக்கின்றன என்பதை அறிந்துகொள்வோம். உயிர் எழுத்துகள் அனைத்தும் காற்றின் தடை இல்லாமல் இயல்பாகவே பிறக்கின்றன.

| | | |
|---|---|---|
| அ, ஆ | – | இவ்விரண்டு உயிர்களும் வாயைத் திறந்து ஒலிப்பதனால் பிறக்கின்றன. |
| இ, ஈ, எ, ஏ, ஐ | – | ஐந்து எழுத்துகளும் வாயைத் திறப்பதோடு மேல்வாய்ப் பல்லை, நா விளிம்பு தொடுவதால் பிறக்கின்றன. |
| உ, ஊ, ஒ, ஓ, ஔ | – | ஐந்து எழுத்துகளும் உதடுகளைக் குவித்து ஒலிப்பதனால் பிறக்கின்றன. |

- **மெய் எழுத்துகளை ஒலிக்கும் முறை**

உடல் இல்லாமல் உயிர் இயங்காது. அதுபோல, மெய் இல்லாமல் மொழியும் இயங்காது. உயிர் ஒலிகள் காற்றின் தடை இல்லாமல் வாயைத் திறந்தவுடன் பிறக்கும். ஆனால், மெய்யொலிகள் காற்றினை நாக்கு, உதடு, பல் ஆகியவை தடை செய்வதால் பிறக்கும். இவ்வாறு தடை செய்யும்போது நாக்கு, பல், உதடு ஆகியவற்றைத் தடவியும் வருடியும் மெய் எழுத்துகள் பிறக்கின்றன. மெய்யொலிகளை ஒலிக்கும் இடம், தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் மூவகையாகப் பிரிக்கலாம். அவை,

1. வல்லினம்
2. மெல்லினம்
3. இடையினம்

### வல்லினம்

காற்று வெடித்து வெளிவருவதால் பிறக்கும் ஒலிகள் வல்லொலிகள். இதனை வெடிப்பொலிகள் என்றும் கூறுவர். **க், ச், ட், த், ப், ற்** ஆகியவை வல்லின எழுத்துகள் ஆகும். இவற்றை ஒலிக்கும்போது, காற்று வேகமாக வெளிவிடப்படல் வேண்டும்.

### மெல்லினம்

மெல்லின எழுத்துகள் காற்று தடைபடாமல் மூக்கின் வழியாக வருவதால் தோன்றுகின்றன. காற்றை வாயில் தடுத்து மூக்கின் வழியாக வெளிவிடுவதால் இவ்வொலிகள் மென்மைத் தன்மை பெறுகின்றன ; இதன் காரணமாக மெல்லினம் என்ற பெயரைப் பெற்றுள்ளன. **ங். ஞ். ண், ந், ம், ன்** ஆகியவை மெல்லின எழுத்துகளாகும்.

### இடையினம்

வன்மையாகவும் இல்லாமல் மென்மையாகவும் இல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்ட தன்மையுடைய ஒலியாக ஒலிக்கப்படும் எழுத்துகளை இடையின எழுத்துகள் என்று கூறுகிறோம். இவற்றை ஒலிக்கும்போது கீழ் உதடுகள் மிகவும் மெல்லியதாகத் தடித்து நிற்கும். **ய், ர், ல், வ், ழ், ள்** ஆகியவை இடையின எழுத்துகள் ஆகும்.

- **மெய்யெழுத்துகள் ஒலிப்பு முறைகள்**

| | |
|---|---|
| க், ங் | இவ்விரு மெய்களும் நாவினது அடிப்பகுதியானது அண்ணத்தின் அடிப்பகுதியைத் தொடுவதனால் தோன்றுகின்றன. |
| ச், ஞ் | இவ்விரு மெய்களும் இடை நா (நடு நாக்கு) நடு அண்ணத்தைத் தொடுவதனால் பிறக்கின்றன. |
| ட், ண் | இவை, நாக்கின் நுனியானது மேல்நோக்கி வளைந்து அண்ணத்தைத் தொடுவதனால் பிறக்கின்றன. |

| | |
|---|---|
| க், ங் | இவ்விரு மெய்களும் நாவினது அடிப்பகுதியானது அண்ணத்தின் அடிப்பகுதியைத் தொடுவதனால் தோன்றுகின்றன. |
| த், ந் | மேல்வாய்ப் பல்லின் உட்புறத்தை நாக்கின் நுனி பொருந்துவதனால் இவ்வெழுத்துகள் தோன்றுகின்றன. |
| ப், ம் | மேல் உதடும் கீழ் உதடும் பொருந்த, இவ்வெழுத்துகள் பிறக்கும். |
| ய் | இது, நாக்கினது அடிப்பகுதி, மேல்வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதனால் பிறக்கின்றது. |
| ர், ழ் | இவை, மேல்வாயை நாக்கின் நுனி தடவுவதனால் பிறக்கின்றன. |
| ல் | இது, மேல்வாய்ப் பல்லின் அடியை, நாக்கின் நுனி தடித்து நெருங்குவதனால் பிறக்கிறது. |
| ள் | இது, மேல்வாயை, நாவினது நுனியானது மேல்நோக்கி வளைந்து, தடித்துத் தடவுவதனால் பிறக்கிறது. |
| வ் | இது, மேல்வாய் பல்லைக் கீழுதடு பொருந்துவதனால் பிறக்கின்றது. |
| ற், ன் | இவை, மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதனால் பிறக்கின்றன. |

இவ்வாறு ஒவ்வோர் எழுத்தும் ஒவ்வொரு முறையில் பிறக்கின்றது. ஆகவே, எழுத்துகளின் ஒலிப்புமுறைகளை அறிந்து, அவற்றைச் சரியாக ஒலிக்க வேண்டும்.

### 1.3.4 ஒலிமாற்றம்

தமிழ் எழுத்துகளைத் தனித்தனியாக ஒலிக்கும்போது, மேற்குறிப்பிட்ட வழியில் அமையும். ஆனால், இவ்வெழுத்துகள் சொற்களில் பயின்று வரும்போது உடன்வரும் எழுத்தின் ஒலியோடு சார்ந்து, சிறிது ஒலி மாற்றம் அடையும்.

உதாரணமாக **'க'** என்பது வெடிப்பொலி. இது தனக்கு இனமான மெல்லொலியோடு சேர்ந்து வரும்போது சிறிது மெல்லொலித் தன்மை பெற்று வரும்.

**எ.கா :**

'கு' என்னும் எழுத்தைத் தனித்துச் சொல்லும்போது, 'ku' என ஒலிக்கும். ஆனால், இவ்வெழுத்து, 'பங்'கு' என்னும் சொல்லில் 'ங்' என்னும் மெல்லொலியுடன் சேரும்போது, 'gu' என ஒலிக்கும்.

இவ்வாறே, அகம் என்ற சொல்லில் 'க' எனும் எழுத்து 'ka' என ஒலிக்காமல் 'ha' என ஒலிக்கும்.

பஞ்சு எனும் சொல்லில் 'சு' எனும் எழுத்து 'su' என ஒலிக்காமல் 'ju' என ஒலிக்கும்.

## 1.4 மொழி முதல், இடை, இறுதி எழுத்துகள்

### மொழி முதல், இடை, இறுதி எழுத்துகள்

தமிழில் ஒரு சொல்லுக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் என்னென்ன எழுத்துகள் வரும் என்பதை நாம் கட்டாயம் அறிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், இக்காலத்தில் பிறமொழிச்சொற்கள் தமிழில் கலந்து வழங்குகின்றன. இத்தகைய சொற்களில் பெரும்பான்மையான எழுத்துகள் தமிழில் மொழிக்கு முதலில் வராதவை. இவற்றைக் கொண்டே தமிழ்ச்சொற்கள் எவை, பிறமொழிச்சொற்கள் எவை என வேறுபடுத்தி அறியலாம்.

### 1.4.1 மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள்

உயிரெழுத்துகளில் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும். பின்வரும் எடுத்துக்காட்டுகளைக் கவனியுங்கள்.

**அ**ம்மா, **ஆ**டல், **இ**ரவு, **ஈ**கை, **உ**தவி, **ஊ**ஞ்சல், **எ**ழுத்து, **ஏ**க்கம், **ஐ**ந்திணை, **ஒ**ட்டகம், **ஓ**லை, **ஔ**வை.

உயிர்மெய் எழுத்துகளுள் பின்வரும் வரிசையிலுள்ள எழுத்துகள் மொழிக்கு முதலாகும்.

க, ச, த, ப, ங, ஞ, ந, ம, ய, வ ஆகிய பத்து மெய்களும் உயிருடன் சேர்ந்து மொழிமுதலாகும். இவற்றுள், முதல் ஆறு எழுத்து, அதன் வரிசையுடன் பன்னிரண்டாகும். இறுதியிலுள்ள நான்கு எழுத்துக்குரிய வரிசையில் வகர எழுத்தில் எட்டும், யகர எழுத்தில் ஆறும், ஞகர எழுத்தில் நான்கும் ஙகர எழுத்தில் ஒன்றும் மொழிக்கு முதலில் வரும்.

| | |
|---|---|
| **க** வரிசை (12) | **க**டல், **கா**ற்று, **கி**ளை, **கீ**ற்று, **கு**டம், **கூ**ட்டல், **கெ**டு, **கே**ள், **கை**வேலை, **கொ**டி, **கோ**ட்டை, **கௌ**ளி |

| | |
|---|---|
| **ங** வரிசை (1) | '**ஙனம்**' என்பது, இடத்தையும் தன்மையையும் உணர்த்தும் பலபொருள் ஒரு சொல்லாகும். இக்காலத்தில் 'ங' எழுத்து மொழிமுதல் பயன்பாட்டில் இல்லை. நப்போல் வளை (ஆத்திசூடி) அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம் என அக்காலத்தில் வழக்கில் இருந்தன. எனவே, ங வரிசையில் எந்தச் சொல்லும் இக்காலத்தில் தொடங்குவதில்லை. |
| **ச** வரிசை (12) | **ச**ட்டம், **சா**ர்பு, **சி**னம், **சீ**ற்றம், **சு**க்கு, **சூ**டு, **செ**ந்தமிழ், **சே**ர்த்தல், **சை**கை, **சொ**த்து, **சோ**ளம், **சௌ**க்கியம் |
| **ஞ** வரிசை (4) | **ஞ**மலி, **ஞா**லம், **ஞெ**கிழி, **ஞொ**ள்கிற்று. இக்காலத்தில் **ஞெ, ஞொ** ஆகிய இரண்டும் வழக்கில் இல்லை. |
| **த** வரிசை (12) | **த**ம்பி, **தா**ய், **தி**ண்ணை, **தீ**, **து**ன்பம், **தூ**க்கம், **தெ**ய்வம், **தே**ங்காய், **தை**யல், **தொ**ழில், **தோ**கை, **தௌ**வல் |
| **ந** வரிசை (12) | **ந**ன்மை, **நா**டு, **நி**ழல், **நீ**ளம், **நு**கத்தடி, **நூ**ல், **நெ**ல், **நே**ற்று, **நை**தல், **நொ**ச்சி, **நோ**ய், **நௌ**வி |
| **ப** வரிசை (12) | **ப**ள்ளி, **பா**டம், **பி**ள்ளை, **பீ**ர்க்கங்காய், **பு**ன்னை, **பூ**மாலை, **பெ**ண், **பே**ழை, **பை**ந்தமிழ், **பொ**ன், **போ**க்கு, **பௌ**வம் |
| **ம** வரிசை (12) | **ம**லர், **மா**ன், **மி**கை, **மீ**ன், **மு**ள், **மூ**ன்று, **மெ**ன்மை, **மே**ல், **மை**விழி, **மொ**ழி, **மோ**ப்பம், **மௌ**வல் |
| **ய** வரிசை (6) | **ய**வனர், **யா**னை, **யு**கம், **யூ**கம், **யோ**சி, **யௌ**வனம் |
| **வ** வரிசை (8) | **வ**ண்டி, **வா**ளி, **வி**ல், **வீ**டு, **வெ**ட்சி, **வே**லை, **வை**கை, **வௌ**வால் |

மேற்கூறிய தடித்த எழுத்துகள், ஒரு சொல்லுக்கு முதலில் வருகின்றன. இவையன்றி, பிறமொழிச்சொற்கள் தமிழில் கலக்கும்போது, அவற்றின் ஒலிக்கேற்ப, இம்முதல் எழுத்துகளில் தொடங்குவதும் உண்டு. எடுத்துக்காட்டாக,

அநியாயம் (வடசொல்)
ஆப்பிள் (ஆங்கிலச்சொல்)

பின்வரும் எடுத்துக்காட்டுகளையும் கவனியுங்கள். பிறமொழிச்சொற்களுள் சில, தமிழில் எந்த மாற்றமுமின்றி அப்படியே ஒலிக்கப்படுகின்றன. அவை, தமிழ் எழுத்துகளால் எழுதப்பட்டாலும் தமிழ்ச்சொற்கள் அல்ல. அத்தகைய சொற்கள் மொழிக்கு முதலில் வராத எழுத்துகளில் தொடங்கும் சொற்களாகவும் உள்ளன. எடுத்துக்காட்டாக,

லட்டு, ரம்பம், ரப்பர், ரவை, டப்பா, லண்டன், லுங்கி, ரொட்டி, ரிக்ஷா, ஜாங்கிரி, ஜிலேபி, ஐஸ்கிரீம், லாபம் போன்று வரும் சொற்களுக்கு முன்னால், இகரம் சேர்த்து 'இலாபம்' என எழுதுவதுண்டு. மேலும், ராமாயணம் – இராமாயணம், லோகம் – உலோகம், ரங்கன் – அரங்கன் என லகர, ரகர எழுத்தில் தொடங்கும் சொற்களுக்கு முன்னால், அ, இ, உ ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி எழுதுவர்.

இக்காலத்தில் எல்லாச் சொற்களுக்கும் இது பொருந்தவில்லை. எடுத்துக்காட்டாக, ஆங்கிலச் சொல்லான 'ரப்பர்' என்பதை, 'இரப்பர்' என எழுதினாலோ பேசினாலோ அதன் உண்மையான பொருள் (Rubber) என்பது அறியப்படாமல், 'யாசிப்பவர்' எனப் பொருளைத் தந்துவிடும். இதனால், பெரும்பாலும், லகர, ரகர எழுத்தில் தொடங்கும் பிறமொழிச்சொற்கள் அந்தந்த எழுத்தையே முதலாகக் கொண்டுள்ளன.

### 1.4.2 மொழிக்கு இடையில் வரும் எழுத்துகள்

தமிழில் மொழிக்கு இடையில் ர், ழ் ஆகிய மெய்யெழுத்துகள் தத்தம் எழுத்தோடு சேர்ந்து வருவதில்லை. அவை தவிர்த்த பதினாறு மெய்யும் தத்தம் மெய்யோடு மொழிக்கு இடையில் வரும்.

**எ.கா :**

சக்கரம், எங்ஙனம், மச்சம், மஞ்ஞை, வட்டம், எண்ணம், மொத்தம், முந்நூறு, அப்பம், அம்மி, மெய்யன், பல்லி, கொவ்வை, உள்ளம், குற்றம், அன்னம்.

மேலும் க், ச், த், ப் தவிர்த்து ஏனைய மெய்கள், பிறமெய்களோடு சேர்ந்தும் மொழிக்கு இடையில் வரும்.

**எ.கா :**

சங்கம், வஞ்சி, வெட்கம், இரண்டு, தந்தம், கம்பன், கொய்சகம், சேர்க்கை, செல்வம், தெவ்யாது, வாழ்க, கள்வன், கற்க, அன்பு.

### 1.4.3 மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள்

பன்னிரண்டு உயிரெழுத்தும் பதினொரு மெய்யெழுத்தும், குற்றியலுகரமும் ஆக மொத்தம் 24 எழுத்தும் மொழிக்கு இறுதியில் வரும்.

**எ.கா :**

**1. உயிரெழுத்து தனித்து வருதல்**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ (ஓரெழுத்து ஒருமொழி)

ஆ (பசு), ஈ (ஓர் உயிரினம், அழிவு, கொடு), ஊ(புலால்), ஏ(அம்பு), ஐ(வியப்பு, அழகு, தலைவன்), ஓ(மதகு கீழ் தாங்கும் பலகை), ஔ(பற்று)

## 2. உயிரெழுத்து, மெய்யுடன் வருதல்

உயிரெழுத்துகள் பன்னிரண்டனுள் எகரம் தவிர்ந்த ஏனைய பதினொன்றும் மெய்யுடன் கூடி மொழி ஈறாகும்.

சால (ல் + **அ**), உலா (ல் + **ஆ**), பனி (ன் + **இ**), தீ (த் +**ஈ**), நடு (ட் + **உ**), பூ (ப் + **ஊ**), தே (த் + **ஏ**), தை (த் + **ஐ**), நொ (ந் + **ஒ**), போ (ப் +**ஓ**), கௌ (க் + **ஔ**)

- **மெய்யெழுத்துகள்**

ஞ் – உரிஞ், ண் – மண், ந் – பொருந், ம் – மரம், ன் – பொன், ய் – வேய், ர் – வேர், ல் – வேல், வ் – தெவ், ழ் – வீழ், ள் – வாள்

- **குற்றியலுகரம்**

சுக்கு, மாசு, வண்டு, சால்பு, அஃது, பாலாறு

பிறமொழிச்சொற்கள் தமிழில் வழங்கும்போது, இங்குச் சுட்டிக்காட்டப்படாத எழுத்துகளில் முடிவதும் உண்டு. அவ்வாறு வரும் எழுத்துகளுடன் உகரம் சேர்த்து ஒலிக்கப்படுகிறது. (எ.கா.) இங்கிலாந் – இங்கிலாந்து

### 1.4.4 மெய்ம்மயக்கம்

மெய்யெழுத்துகள் பதினெட்டு என நாம் அறிந்துள்ளோம். இவ்வெழுத்துகளுள் சில தம்முடன் தாம் மயங்கும். சில எழுத்துகள் தம்முடன் பிற மயங்கும். இவ்வாறு வருவதனை மெய்யெழுத்துகள் மயங்குதல் எனக் கூறுவர்.

எடுத்துக்காட்டாக, 'பள்ளி' இச்சொல்லைக் கவனியுங்கள். இதில், ளகர மெய்க்கு அடுத்து அதே மெய் (ள் + இ) வந்துள்ளது. இவ்வாறு வருவது மெய்ம்மயக்கம்.

மற்றோர் எடுத்துக்காட்டைப் பாருங்கள். 'தங்கம்' இச்சொல்லில், ஙகர மெய்க்கு அடுத்துக் ககர மெய் (க் + அ) வந்துள்ளது. இவ்வாறு வருவதும் மெய்ம்மயக்கம்தான்.

எனவே ஒரு மெய்யெழுத்தானது, அதே மெய்யெழுத்துடனோ பிற எழுத்துகளுடனோ மயங்கி வரும் என அறிகிறோம், அவை, உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்பன.

- **உடனிலை மெய்ம்மயக்கம்**

மெய்யெழுத்துகளுள் ரகரம், ழகரம் ஆகிய இரண்டு மெய்யெழுத்தையும் தவிர்த்து, ஏனைய பதினாறு மெய்யும் தம்முடன் தாம் கூடிவரும். அதாவது, மயங்கிவரும். பின்வரும் எடுத்துக்காட்டுச் சொற்களைக் கவனித்தால் நன்கு விளங்கும்.

ப**க்க**ம், அ**ங்ங**னம், அ**ச்ச**ம், வி**ஞ்ஞா**னம், ச**ட்ட**ம், க**ண்ண**ன், த**த்தை**, எ**ந்நா**ள், அ**ப்ப**ளம், வன்**மம்**, செ**ய்யா**மை, வெ**ல்ல**ம், கொ**வ்வை**, ப**ள்ள**ம், ப**ற்று**, க**ன்னி**

- **வேற்றுநிலை மெய்ம்மயக்கம்**

மெய்யெழுத்துகளுள் க,ச,த,ப ஆகிய நான்கும் தவிர்த்து ஏனைய பதினான்கு மெய்யும் பிற மெய்யெழுத்துகளுடன் கூடிவரும். இவ்வாறு மெய்ம்மயங்குவதை வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்கிறோம். பின்வரும் எடுத்துக்காட்டுகள்வழி, இதனைப் புரிந்துகொள்ளலாம்.

வ**ங்க**ம், ப**ஞ்சு**, தி**ட்ப**ம், வெ**ண்க**லம், ப**ந்து**, ப**ம்ப**ரம், செ**ய்தி**, போ**ர்வை**, வெ**ல்க**, தா**ழ்ப்**பாள், கே**ள்வி**, க**ற்கு**வியல், ம**ன்ற**ம்.

எந்தெந்த எழுத்துகள் மொழிக்கு (சொல்லுக்கு) முதலிலும், இடையிலும், இறுதியிலும் உறுப்பாக நின்று பொருள் உணர்த்தும் என்பதை இப்பகுதியில் கண்டோம்.

## 1.5 கிரந்த எழுத்துகள்

### கிரந்த எழுத்துகள்

வடமொழி எழுத்து : வடமொழி எழுத்தொலியைத் தமிழ் எழுத்தொலிக்கு ஏற்ப மாற்றியெழுதுதலே மரபாகும். அவை வருமாறு :

| | |
|---|---|
| 1. ஜ – ச, ய | வாக மாறும்; ஜகதீசன் – சகதீசன்; விஜயாள் – விசயாள்; ஜயவேல் – சயவேல்; புஜம் – புயம்; ரோஜா – உரோசா; பூஜாரி – பூசாரி; ஜப்பான் – யப்பான் |
| 2. ஷ – ச, ட | வாக மாறும்; ஷண்முகம் – சண்முகம்; கஷ்டம் – கட்டம்; சஷ்டி – சட்டி; ஷெல்பு – செல்பு; பாஷாணம் – பாடாணம்; திருஷ்டி – திட்டி |
| 3. க்ஷ – க, ச, ட | கரமாக மாறும்; க்ஷணம் – கணம்; க்ஷேமம் – சேமம்; பிக்ஷை – பிச்சை; ஆக்ஷேபணை – ஆட்சேபணை; பரீக்ஷை – பரீட்சை |
| 4. ஸ – ச, அ, த | கரமாகும்; ஸமயம் – சமயம், அமயம்; பாஸம் – பாசம்; ஸம்ஸாரம் – சமுசாரம்; மாஸம் – மாதம் |
| 5. ஹ – அ, இ, ஓ, க | வாக மாறும்; ஹரி – அரி; ஹிருதயம் – இருதயம்; ஹோமியோபதி – ஓமியோபதி; மோஹனன் – மோகனன்; சுஹம் – சுகம் |

### 1.5.1 இணை எழுத்துகள்

1. அபூர்வம் – அபூருவம் ; ஆத்மா – ஆத்துமா ; பத்னி – பத்தினி ; சொர்ணம் – சொருணம் ; பத்மினி – பதுமினி ; கர்ணன் – கன்னன் ; அதிருஷ்டம் – அதிட்டம்
2. ஆகாரத்தில் முடிபவை ; தமிழில் ஐகாரத்தில் முடியும் ; கலா – கலை ; பாடசாலா – பாடசாலை ; மேகலா – மேகலை
3. வடமொழி இணை எழுத்து இகரச்சாரியை ஏற்றும், உகரச் சாரியை ஏற்றும் வரும். பாக்யம் – பாக்கியம் ; காப்யம் – காப்பியம் ; அக்ரமம் – அக்கிரமம் ; சுப்ரமண்யன் – சுப்பிரமணியன் ; சத்யவதி – சத்தியவதி (இகரம்) ; பத்மம் – பதுமம் ; அர்த்தம் – அருத்தம் ; நிர்வாகி – நிருவாகி (உகரம்)
4. கெட்டும் திரிந்தும் வரும். ஸ்தலம் – தலம் ; அஸ்தம் – அத்தம் ; ஸ்தூபி – தூபி
5. தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவாக வரும் பொதுவெழுத்துத் தமிழில் வழங்குங்கால், சிறப்பெழுத்தாகவே வரும். அநுமன் – அனுமன் ; ஆநந்தன் – ஆனந்தன்.
6. பிறமொழி ; வடமொழியைப் போலவே, காலப்போக்கில் வேறு அயல் மொழியும் தமிழில் வந்து வழங்குகின்றன. அவற்றையும் தமிழ் ஒலிக்கியைய அமைத்து எழுதவும். அவை : ஆங்கிலம் : COFFEE – காஃபி ; SOCIETY – சொசைட்டி ; SWIS – சுவிசு ; ஸ்காட்லாண்ட் – காட்டுலாந்து; FORD – போர்டு ; ஸ்டாலின் – இசுடாலின், தாலின் ; லெனின் – இலெனின்

குறிப்பு : பிறமொழியைத் தமிழில் எழுதுங்கால் அம்மொழிக்கு நேரான பொருள் தரும் சொல் தமிழில் இருந்தால் அச்சொல்லையே வழங்க வேண்டும். எ.கா. (புட்பம் – மலர், பூ) கவர்னர் – ஆளுநர் ; போர்டு – கரும்பலகை, விளம்பரப் பலகை.

## 1.6 தொகுப்புரை

### தொகுப்புரை

இவ்வலகில் இலக்கணம் என்பதன் பொருள், எழுத்தின் வடிவம், எழுத்தின் வகைதொகை, மாத்திரை, இன எழுத்து, சுட்டெழுத்து, வினா எழுத்து, சாரியைகள், வடமொழி எழுத்துகள் ஆகியன தக்க எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. மேலும் தமிழ்மொழியின் ஒலிப்புமுறைமை மற்றும் எழுத்துகளைப் பயன்படுத்தும் முறைமைகள் இவ்வலகில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

| தன் மதிப்பீடு : வினாக்கள் – II |
|---|
| 1. மெய்யொலிகளின் வகைகள் யாவை? |
| 2. மெய்யெழுத்துகளின் ஒலிப்பு முறைகள் பற்றி எழுதுக |
| 3. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் பற்றி எழுதுக. |
| 4. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் பற்றி எழுதுக. |
| 5. மெய்ம்மயக்கம் என்றால் என்ன? |
| 6. உடனிலை மெய்ம்மயக்கம் பற்றி எழுதுக. |